<u>அசல் வழக்கு எண். 146/2019</u>

07.04.2022

**பெயர் –சரஸ்வதி (Pw1)**

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி சொக்கலிங்கத்தின் தம்பி நாகராஜன் என்பவரின் மனைவி நான் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 22.11.2011 ம் தேதியில் பழனியில் திரு ஆவினன் குடியில் வைத்து திருமணம் நடைபெற்றது. எங்கள் இருவருக்குமே இரண்டாவது திருமணம் ஆகும். எனது முதல் கணவர் கோபிசெட்டியாளையத்தில் உள்ளார். விவாகரத்து ஆகிவிட்டது. அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால அசல் என்னிடம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் நாகராஜனுடன் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் 4 ஆண்கள், 1 பெண் ஆவர். ஆண்களின் பெயர்கள் பழனியப்பன், ராமசாமி, சொக்கலிங்கம், எனது கணவர் பெயர் நாகராஜன் 4 வது ஆவார். பெண் பெயர் ஈஸ்வரி. எல்லாரும் காரத்தொழுவில் வசிக்கிறார்கள். அவர்களில் பழனியப்பன் என்பவர் சமீபத்தில் இறந்துவிட்டார். எல்லாரும் விவசாயம் சார்ந்த கூலித் தொழில் செய்கிறர்கள். சொக்கலிங்கம் மட்டும் EB ல் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். தாவா சொத்து எனது சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல எனது சுவாதீனத்தில் தான் உள்ளது. தாவா சொத்து சொக்கலிங்கத்தின் சுவாதீனத்தில் உள்ளது அந்த வீட்டிற்கான மின் கட்டணம் ரசீது, குடிநீர் கட்டண ரசீது ஆகியவை சொக்கலிங்கத்தின் பெயரில் தான் உள்ளது என்றால் அவர் வீட்டுக்கு உள்ளது தாவா வீட்டிற்கு இல்லை. நான் குடியிருப்பதாக சொல்லும் வீட்டிற்கு சொத்து வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது கணவர் பெயரில் உள்ளதை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி தம்பி நாகராஜனை நான் முறையாக திருமணம் செய்ததற்கு உண்டான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதி எழுதிக் கொடுத்த ரத்து பத்திரம் செல்லாது என கோரவும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து

பிரதிவாதி பதிவு செய்துள்ள ரத்து பத்திரம் சட்ட நிலையில் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம்/–திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்